JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **2/2010** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 5** | Prosecution /Defence / Court | |
| Name | **Selvam** | Caste | |
| Father's Name | **Maruthapillai** | Calling | |
| Village | **Sakthi nagar, Vijayamangalam** | Religion | |
| Taluk | **Perundurai** | Age | |

**Accused absent**. **Petition U/s**.317 **Cr**.**P**.**C**., **filed and allowed**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 16.07.2025.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு பாத்திர வியாபாரம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது ஆகும். 17.11.2008 ம் தேதியன்று மாலை 5.00 மணியிலிருந்து 6.00 மணி சுமார் இருக்கும் பெருந்துறை காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் களவு போன வீட்டின் இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார். பார்வை மகஜர் சாட்சிகளாக என்னையும் முத்துசாமியையும் இருக்குமாறு கேட்டுக் கொண்டதின் பேரில பார்வை மகஜநா சாட்சிகளாக இருக்க ஒப்புக் கொண்டு பார்வை மகஜரில் முதலாவதாக நானும், இரண்டாவதாக முத்துசாமியும் சாட்சி கையொப்பங்கள் செய்தோம். **பார்வை மகஜர் சான்றிட்ட நகல் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பெருந்துறை காவல் நிலைய காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் பாத்திரம் வியாபாரம் செய்கிறேன். எத்தனை மணிக்கு சென்று வீட்டுக்கு திரும்ப வேண்டும் என்றால் காலை 6 மணிக்கு சென்று மதியம் 12 மணிக்கு வீட்டுக்கு திரும்பி வருவேன். அ.சா.1 குருசாமி பக்கத்து வீடு என்றால் சரிதான். என்னுடைய வீட்டிலிருந்து பார்த்தால் அ.சா.1 குருசாமி வீடு தெரியும் என்றால் சரிதான். அங்கு சத்தம் வந்தால் கூட என் வீட்டில் கேட்கும் என்றால் சரிதான். 17.11.2008 ம் தேதி காலை 11 மணியிலிருந்து முழுவதும் வீட்டிலிருந்தேன் என்றால் சரிதான். அன்றைய தினம் எத்தனை மணிக்கு போலீசார் சம்பவ இடத்துக்கு வந்தார்கள் என்றால் மதியம் 2 மணி இருக்கும். அப்போதே வரைபடம் வரைந்து கையெழுத்து பெற்றுக் கொண்டார்கள் என்றால் சரிதான். அன்றைய தினம் காவல் நிலையம் வரச் சொன்னார்கள் காவல் நிலையம் சென்றேன். காவல் நிலையத்தில் மாலை 6.00 மணிக்கு பார்வை மகஜரில் கையெழுத்து செய்தேன். நான் கையெழுத்து செய்ததாக சொல்லக்கூடிய பார்வை மகஜரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அ.சா.1 என் பக்கத்து வீட்டுக்காரர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை